ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 8.9 – கருமாணிக்கமலை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 8.9 – கருமாணிக்கமலை

‡ கரு மாணிக்க மலை மேல் ⋆
மணித் தடம் தாமரைக் காடுகள் போல் ⋆
திருமார்வு வாய் கண் கை ⋆
உந்தி கால் உடை ஆடைகள் செய்ய பிரான் ⋆
திருமால் எம்மான் செழு நீர் வயல் ⋆
குட்ட நாட்டுத் திருப்புலியூர் ⋆
அரு மாயன் பேர் அன்றிப் பேச்சிலள் ⋆
அன்னைமீர் இதற்கென் செய்கேனோ ‖ **8.9.1** ‖

அன்னைமீர் இதற்கென் செய்கேன் ⋆
அணி மேருவின் மீதுலவும் ⋆
துன்னு சூழ் சுடர் ஞாயிறும் ⋆
அன்றியும் பல் சுடர்களும் போல் ⋆
மின்னு நீள் முடி ஆரம் ⋆
பல் கலன் தான் உடை எம் பெருமான் ⋆
புன்னையம் பொழில் சூழ் ⋆
திருப்புலியூர் புகழும் இவளே ‖ **8.9.2** ‖

புகழும் இவள் நின்றிராப் பகல் ⋆
பொரு நீர்க் கடல் தீப் பட்டு ⋆
எங்கும் திகழும் எரியோடு செல்வதொப்பச் ⋆
செழும் கதிர் ஆழி முதல் ⋆
புகழும் பொரு படை ஏந்திப் போர் புக்கு ⋆

அசுரரைப் பொன்றுவித்தான் ⋆
திகழு மணி நெடு மாட நீடு ⋆
திருப்புலியூர் வளமே ‖ **8.9.3** ‖

ஊர் வளம் கிளர் சோலையும் ⋆
கரும்பும் பெரும் செந்நெலும் சூழ்ந்து ⋆
ஏர் வளம் கிளர் தண் பணைக் ⋆
குட்ட நாட்டுத் திருப்புலியூர் ⋆
சீர் வளம் கிளர் மூ உலகுண்டுமிழ் ⋆
தேவ பிரான் ⋆
பேர் வளம் கிளர்ந்தன்றிப் பேச்சிலள் ⋆
இன்றிப் புனை இழையே ‖ **8.9.4** ‖

புனை இழைகள் அணிவும் ⋆
ஆடை உடையும் புதுக் கணிப்பும் ⋆
நினையும் நீர்மையதன்றிவட்கிது ⋆
நின்று நினைக்கப் புக்கால் ⋆
சுனையினுள் தடம் தாமரை மலரும் ⋆
தண் திருப்புலியூர் ⋆
முனைவன் மூ உலகாளி ⋆
அப்பன் திருவருள் மூழ்கினளே ‖ **8.9.5** ‖

திருவருள் மூழ்கி வைகலும் ⋆
செழு நீர் நிறக் கண்ண பிரான் ⋆
திருவருள்களும் சேர்ந்தமைக்கு ⋆
அடையாளம் திருந்த உள ⋆
திருவருள் அருளால் ⋆
அவன் சென்று சேர் தண் திருப்புலியூர் ⋆

திருவருள் கமுகொண் பழத்தது ⋆
மெல்லியல் செவ்விதழே ‖ **8.9.6** ‖

மெல் இலைச் செல்வ வண் கொடி புல்க ⋆
வீங்கிளம் தாள் கமுகின் ⋆
மல் இலை மடல் வாழை ⋆
ஈன் கனி சூழ்ந்து மணம் கமழ்ந்து ⋆
புல் இலைத் தெங்கினூடு ⋆
கால் உலவும் தண் திருப்புலியூர் ⋆
மல்லல் அம் செல்வக் கண்ணன் தாள் அடைந்தாள் ⋆
இம் மடவரலே ‖ **8.9.7** ‖

மடவரல் அன்னைமீர்கட்கு ⋆
என் சொல்லிச் சொல்லுகேன் ⋆
மல்லைச் செல்வ வட மொழி மறை வாணர் ⋆
வேள்வியுள் நெய் அழல் வான் புகை போய் ⋆
திட விசும்பில் அமரர் நாட்டை மறைக்கும் ⋆
தண் திருப்புலியூர் ⋆
படவரவணையான் தன் நாமம் அல்லால் ⋆
பரவாள் இவளே ‖ **8.9.8** ‖

பரவாள் இவள் நின்றிராப் பகல் ⋆
பனி நீர் நிறக் கண்ண பிரான் ⋆
விரவார் இசை மறை வேதியர் ஒலி ⋆
வேலையின் நின்றொலிப்ப ⋆
கரவார் தடம் தொறும் தாமரைக் கயம் ⋆
தீவிகை நின்றலரும் ⋆

புரவார் கழனிகள் சூழ் ⋆
திருப்புலியூர்ப் புகழ் அன்றி மற்றே ॥ **8.9.9** ॥

அன்றி மற்றோர் உபாயம் என் ⋆
இவள் அந் தண் துழாய் கமழ்தல் ⋆
குன்ற மா மணி மாட மாளிகைக் ⋆
கோலக் குழாங்கள் மல்கி ⋆
தென் திசைத் திலதம் புரைக் ⋆
குட்ட நாட்டுத் திருப்புலியூர் ⋆
நின்ற மாயப் பிரான் திருவருளாம் ⋆
இவள் நேர் பட்டதே ॥ **8.9.10** ॥

‡ நேர் பட்ட நிறை மூ உலகுக்கும் ⋆
நாயகன் தன் அடிமை ⋆
நேர் பட்ட தொண்டர் தொண்டர் தொண்டர் ⋆
தொண்டன் சடகோபன் ⋆
சொல் நேர் பட்ட தமிழ் மாலை ⋆
ஆயிரத்துள் இவை பத்தும் நேர் பட்டார் அவர் ⋆
நேர் பட்டார் ⋆
நெடுமாற்கடிமை செய்யவே ॥ **8.9.11** ॥

அடிவரவு — கருமாணிக்க அன்னைமீர் புகழும் ஊர் புனையிழை திருவருள் மெல்லிலை மடவரல் பரவாள் அன்றி நேர்பட்ட நெடுமாற்கு

கருமாணிக்கமலை முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்